முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி.

**MCOP NO. 45/2020**

எ.ம.சா.1 தேதி. 24.06.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆதித்திய விஸ்வா | த/பெ, | சேதுராஜன் |
| வயது | 24 | தொழில் | நிர்வாக அலுவலர், |
| மதம் | | கிராமம் | தஞ்சாவூர் |
| தாலுக்கா | தஞ்சாவூர் | | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு

முதல் விசாரணை:–

நான் இந்த மனுவில் 2வது எதிர்மனுதாரர் அலுவலகத்தில் தஞ்சாவூர் கோட்ட அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லக்கூடிய வாகனத்தின் ஓட்டுனர் சிதம்பரம் லால்புரத்தை சேர்ந்த மகேஷ்குமார் என்பவர் விபத்து காலத்தில் குடிபோதையில் இருந்தார். முன்னுக்கு பின் முரணாக பேசி வந்ததாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய குடிபோதை சான்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சான்றின் நகல் எ.மசாஆ1 ஆகும். குடிபோதையில் வாகனத்தை செலுத்துவது காப்பீடு விதிமுறையின் மீறல் என்பதால் காப்பீடு நிறுவனத்தை பொருத்து வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும். அதேபோல விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் ஓட்டுநர் குடிபோதையில் இருந்தால் என்பதும் அது காப்பீடு விதிமுறையின் மீறல் என்பதையும் மனுதாரர் ஒத்துக்கொண்டுள்ளார். எங்களை பொருத்து இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் வேண்டுகிறேன்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

மனுதாரர் எங்கள் நிறுவனத்தை பொருத்து 3ம் நபர் என்றால் சரிதான். காப்பீடு விதிமீறல் என்பது காப்பீட்டாளருக்கும், காப்பீடு நிறுவனத்திற்கும் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் காப்பீடு மற்றும் ஓட்டுநர் உரிமம் நிலுவையில் தான் உள்ளது. எங்கள் நிறுவனத்தை பொருத்து மனுதாரர் 3ம் நபர் என்றால் சரிதான். மனுதாரர் 3ம் நபர் என்பதால் மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.